உ

வேலுமயிலுந்துணை.

ஸ்ரீ சிவசுப்பிரமணியக் கடவுள்மீது,

அதி நூதன விசித்திர வர்ண மெட்டுகளமைந்த

# இன்பரச

# கீர்த்தனங்கள்.

5-OCT 1917 MADRAS

இஃது,

எட்டயபுரம் சமஸ்தானம் லெக்ஷிமிபுரம் மஜரா
வெங்கடேசுர புரக்கிராமத்தில் வசிக்கும்,
ஸ்ரீ சாதுகாமாக்ஷியம்மன் வரப்பிரசாதகராகிய
தென்தெலுங்கு தேசாபகிகளின் குலதிலகரும்
தெற்குந்ததக காட்டூர் தமிழ்வாத்திமை மா-ள-ஸ்ரீ
ப. சுவாமிநாத பிள்ளையவர்களின் சிசியருமான,

மகா-ள-ள-ஸ்ரீ

வெ. கு. பெ. சோலையன் செட்டியாரென்று பெயர்
விளங்கிய, வித்வான்

**சோலைசாமிக் கவிராயரவர்களாலியற்றியதை,**

ஷை வெங்கடேசுரபுரம், மகா-ள-ள-ஸ்ரீ ஸ்ரீமான
கனதனவியாபாரியும் இந்நூலாசிரியருக்கு
இரண்டாந் தந்தையருமாகிய,

வெ கு. பெருமாள் செட்டியாரவர்களின்
பொருளுதவி கொண்டு
ஷையூர் ஸ்கூல்மாஸ்டர்.
கோ. போ. சுப்பயன்செட்டியாரவர்களால்,

விருதுபட்டி ஸ்ரீமான்
இராமலிங்கக்குருக்களவர்களது,
சச்சிதானந்த அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப் பெற்றது

இதன் விலை] 1917. [அணா 2.

உ

வேலுமயிலுந் துணை.

# சாற்றுக் கவிகள்.

வெங்கடேசுரபுரம், பலசரக்கு மளிகை, மகா-ள-ள-ஸ்ரீ

சி. ச. சின்னையா செட்டியாரவர்க ளியற்றியது,

இன்னூலாசிரிய ரெனுஞ் சோலை சாமி
இன்பமுடன் கேட் டிடவே இசைபா யாலும்
அந்நூலுக் கதிக விருப்பங்களோடு
அளித்தன்னிவ்வாசிரியமன்பாய்ப்போற்றி
என்னாலுமதற்கிணையாய்ச் சொல்லப் போமோ
இலக்கணநூலறிகத இசைவல்லோர் போற்றும்
பன்னூலாசிரிய னெனுஞ் சின்னைய வேளிதைப் பகர்ந்தேன்
பரங்குன்றில் வாழ்பவனை யென்னாளும்போற்றி செய்து

## இதுவுமது

சீர்வளரும் நாரணரின் பதியே வாழும்
திருநாமமென்ற வையே நீல மேகன்
கார்வளருந் தவமதனி லுதித்த புத்ரன்
கரியசிகாமணி யென்ற சோலைசாமி
பார்வளரு மின்னூலுக் கதிகமாகப்
பரீடடசே ஆசிரிய வே [illegible]
பேர்வளருஞ் சின்னைய [illegible]
பிழையிருந்தாலும் பொறுத்தருள்வீர் பெரியோர் நன்றே

222932
சாற்றுக் கவிகள் 000.008
[illegible]ப் பெற்றது.

01

உ

வேலுமயிலூர் துணை.

ஸ்ரீ சிவசுப்பிரமணியக் கடவுள்மீது,

அதி நூதன விசித்திர வர்ன மெட்டுகளமைந்த,

# இன்பரச

# கீர்த்தனங்கள்.

இஃது,

ஏட்டயபுரம் சமஸ்தானம் லெக்ஷிமிபுரம் மஜரா

வெங்கடேசுர புரக்கிராமத்தில் வசிக்கும்,

ஸ்ரீ சாதுகாமாக்ஷியம்மன் வரப்பிரசாதகராகிய

தென்தெலுங்கு தேசாதிபதிகளின் குலதிலகரும்

தெற்குநத்தக் காட்டூர் தமிழ்வாத்திமை மா-ா-ஸ்ரீ

ப. சுவாமிநாத பிள்ளையவர்களின் சிசியருமான,

மகா-ா-ா-ஸ்ரீ

வே. கு. பெ. சோலையன் செட்டியாரேன்று பெயர்

விளங்கிய, வித்வான்

**சோலைசாமிக்கவிராயரவர்களாலியற்றியதை,**

...டி வெங்கடேசுரபுரம், மகா-ா-ா-ஸ்ரீ ஸ்ரீமான்

கனதனவியாபாரியும், இந்நூலாசிரியருக்கு

இரண்டாந் தந்தை...

வெ. கு. பெருமாள் செட்டியாரவர்களின்

பொருளுதவி கொண்டு

மெய்யூர் ஸ்கூல்மாஸ்டர்,

கோ. போ. சுப்பயன்செட்டியாரவர்களால்,

விருதுபட்டி ஸ்ரீமான்

இராமலி... ...க்களவர்களது,

சத்தி... ...பிரசாலையிற்

இதன் ... [அணா 2

5 - OCT 19..

222932

825:47
N17
1200

உ

வேலுமயிலுந் துணை.

ஸ்ரீ சிவசுப்பிரமணியக் கடவுள் மீது.

அதி நூதன விசித்திர வர்ன மெட்டுகே ளமைந்த,

# இன்பரச கீர்த்தனங்கள்.

விநாயகர் துதி

விருத்தம்

திங்கள்மதி சூடிய தோர்சிவனார் மைந்தன்
திருவடியைப் போற்றி செய்து தினமும் வாழ்த்தி
மங்களஞ்சேர் கீர்த்தனவ கனிசையாய்ப் பாட
வாரணவிநாயகன்றருள் வழுத்துவோமே

பரமசேயா யென்றவர்ணமெட்டு
இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் ஆதி

பல்லவி.

மூசிகவாகா யெம்மை முற்றும் பார் யோகா

அநுபல்லவி.

பாசமுடநேற்றியே பணிய நீ வா வா
நேசமது கொண்டவானே நிமலனே காவா
யென்னை நித்தங்கார்பபவா (மூசிக)

அங்குசபாசங்க ளேந்தும் அண்ணலே வாரும்
செங்கரம்பணிந்து போற்றுஞ் சிறுவனே காரும்
அருள்செய்ய வே பாரும் (மூசிக)

பாலன்சோலை தாசன்பாடும் பைந்தமிழ் போற்றி
காலமதிலுந்தன் பாதந்தந்துமே யேற்றி
வினைதாங்கியே சாற்றி (மூசிக)

## சரஸ்பதி துதி.

### விருத்தம்.

வெண்கலைபூண்டுநின்ற விமலியே கமல வாணி
உன்பதம்போற்றி செய்து உகந்து இந்நூ லிசைக்க
அன்பர்கள் சாற்றும் வேத அம்மணி கிருபைசெய்வாய்
பண்புடனிறைஞ்சியேற்றப் பதமலர் தருவாய் நீயே

அள்ளி யள்ளிக்குடிக்கும் யென்றவற்ன மெட்டு
இராகம் மால்சோஷ் தாளம் ஆதி

### பல்லவி.

வாணிசரஸ்பதியே வந்தருள்செய்குவாய்
வாகாயுனது பாதமே வெகுநீதமே வா கா
மண்ஜெகந்தன்னிலே செஞ்சரணங் கொடு
அஞ்சலுடந்தாருங் கஞ்சமலரினை (வாணி)

அன்னவாகனியே உன்னைச் சின்னவன் போற்றவே
அருளது செய்குவாய் நீயே ப தாகியே அரு
அந்தணர் வேதியர் யாவரும் போற்றிடச்
சிந்தைதனிலிருந்தன்பு கொடுத்திட (வாணி

தம்பூர்வீணைமுளக்கியன் பாகவாயென்முன்
சாற்றும பொன்னம்மணிநீயே வந்திடுவயே சாற்று
தண்டாமரைக்குடி கொண்டவளே உன்னைக்
கண்டவர்போற்றவேயெண்டிசையும் புகழ் (வாணி

தேசாதிபதிகுலத்தில் வாசப்புகழ் பெற்ற
தேசிகன் சோலையாடிடும் செந்தமிழினை தேசி
சித்தம் வைத்தேமகி ழெத்திசையுந்துதி
நித்தமருள் தாரும் பொற்றுமரையாளே (வாணி

## சோமசுந்தரக் கடவுள் துதி

### விருத்தம்

ரமகுருவானந்த பசுபதி சிவா வென்று
பக்தர்கள் துதித்தேற்றியே
ண்டியன் அரசு செய்தாண்டிடுங் கூடல்நகர்

பதிவந்த சித்தாந் தனே
அரவணி புராந்தகா மறைமுதலி யீசனே
அய்முகா உனது பாதம்
அன்புடன் போற்றிடவு நின்பதந் தந்தருளும்
ஆதியே ஜெக தீசனே
சுரநதி பொன் மாதையே சிரமதிற் சூடிடும்
சுந்தரா உனது தாளைத்
தோத்திரஞ் செய்யு மடியார்களைக் கார்மதுரை
சோம சுந்தரரூபனே
நிருமலாவரதனே நீணிலம் புகழ் கின்ற
நித்தனே யெனது குறைகள்
நீங்கவே விடையேறு காங்கயா சாற்றிநேன்
நீலகண்டக் கடவுளே

வேலவாயெனையாளா யென்ற வர்ன மேட்டு
இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் ஆதி
பல்லவி.

சுந்தரா யெனை வந்தாதரித் தருளும் (6
சுந்தராசோம சுந்தரா சோம (சு

அநுபல்லவி

சந்திர சேகரனே சார்ந்த தற்பரனே
சாமியுன்னைப் பணிந்தே நா நேனை
யென்னைத்தற் காத்தருளுஞ் சோம (சு
கங்கையைத் தரித்தாய் கரியுரி போர்த் தாய்
கருணாகரா உனதுபதந் தாராயருள்
கர்த்தனே சுத்தனே சோம (சு
தில்லையம்பதிவாசா தினமுந் துதித்தே னீசா
தீனதயா பரனே வா வா வா யெந்தன்
சிந்தனையகற்றுஞ் சோம (சு
வல்லபைநேயா வந்தருளுஞ் சகாயா
தொல்லைவினையகற்றுஞ் செவ்வாயா
சோலைகாசன் பணிந்தேற்றுஞ் சோம (சு

# இன்பரச கீர்த்தனங்கள்.

## திருமால் துதி

### விருத்தம்

மந்திரகிரியை முன்னாள் மத்தாகச் சேர்த்திருக்கி (7
இந்திரர் யாவரோடுமிசைத்தி ஞத்தமிர்தஞ்செய்தாய்
அந்தரர் முனிவர் சாற்ற ஆயர்மா நகரில் வந்த
செந்திருவடிகள் போற்ற திருவருள்செய்வாய் மாலே

பரமானந்த மென்றவர்ன மெட்டு மகுடமில்லை

இரகம் தேசிகதோடி தாளம் ஆதி

### பல்லவி.

அரிநாரணனே வரந்தாரும் அன்பர்கள் போற்றும் (8

### அநுபல்லவி

ஆயர் மனையிலுருக் கொண்டாயே நித
மன்புடன் கோசலை யாண்டாயே
நேயமசோதை யிடம்நின்றாயே யருள்
நிதமுன் பதமலரே தருவாயே (அரி

### சரணங்கள்

புவியோர் புகழுஞ் சோலைதாசன் னிதம்பணியுங்
கவியோர் மகிழும் பிரகாசன் மாதவர் புகழ்
மனமே மகிழ்ந்திடு முல்லாசன் ஜெய ஜெயென
அருள் தேவர் சாற்றியதேசர் நேசன் முன்னேவரு
வாய் (அரி

இந்நூலாசிரியருடைய குலதேவதையாகிய

## ஸ்ரீசாது காமாக்ஷி யம்மன் துதி

### விருத்தம்

சாதுகள்போற்றுங் காஞ்சித்தலமதில் வாழ்ந்ததாயே
மாது நீபிரிதி வீச்ரன் வங்கிசந்துலங்க வைத்த
தாதையேஉனது தாளைச் சரணமென்றடையும்யேளை
பேதமொன்றெண்ணிடாமல்பிழைபொருத்தருளுவாயே

அம்மா மதுரை மீனாக்ஷி யென்ற வர்ண மெட்டு

இராகம் தேசிகம் தாளம் ஆதி

பல்லவி.

என்னை வந்தாதரித்தருள் காமாக்ஷி மிக 10
வாதுசெய்தாலெளி தூரச்சி உன்னை
வாகுடன் புகழக்காச்சி வரமருளுமாச்சி (வந்

தாயே செந்தாமரையிலங் குஞ்சோதி அருள்
செய்யவே வருவாய் நீதி முறை
செப்பிடேனே நேசவாதி ஜெகம்புகழும் ஆதி (வந்

அம்மா. காஞ்சிநகரி லெழுந்த நாளும் வெகு
பாஞ்சையாக அரசாளும் வினை
தாங்கியே முறையைக்கேளுமகருணைபுரிந்தாளும் (வந்

நாலு. வேதங்களையுணருஞ் ஈசன் வெங்க
டேசமாநகரில் வாசன் தினம்
வேண்டியேபணியுநேசன் விளங்குஞ்சோலைதாசன் (வந்

இன்னூலாசிரியா வசிக்கும் கிராமதேவதையாகிய

துர்க்கை யம்மன் துதி

விருத்தம்

மக்களந்துலங்கு கின்ற மகிமைசேர் மாயர் நாமம் 11
வெங்கடேஸ்புரமேவாளும் வீரமாகாளிதுர்க்கை
சங்கரியருள்வாயென்னைத் தமிள்ப்பதர்துதிக்க யென்றும்
கங்கணஞ்சுட்டிதோன்றக் காளிநீவருவாயிங்கு

வருவாய்சண்முகனே யென்ற வர்ண மெட்டு

இராகம் செஞ்சுருட்டி அட தாளம்

பல்லவி

வருவாயீஸ்பரியே வல்வினையேயகற்ற (வரு

அநுபல்லவி

தருவாயுனதுபாதந்தந்து காத்தருளம்மணி
திருநீறணியுந்துர்க்கை தேவியுனைப்பணிய (வரு

கண்ணீரின் மலர் துலங்க கலிவாகயை நதன் முன்னமே
பொன்னிசைட டொளியே புவியோர் மகிளஇங்கு)வரு
திருமால்தனக்கிளைய தீனரட்சகிபோற்றி நேன்
கருவேல்விழியுடைய காளியம்பிகை நீயே (வரு
திங்கள்மதியைப்போலே யெங்கும்புகழுஞ் சோதியே
பங்கம்பஞ்சில்லாமல் பாலன்சோலையைக்காக்க (வரு

ஸ்ரீ சிவசுப்பிரமணியக் கடவுள் துதி
விருத்தம்

அருள்பெருதென்பரங் கிரியிலமர்ந்த செவ்வே
ளடியிணையையனு தினமுந்தொழுது யேற்றி
மருவுலவும் பஜனைபதம் பரிவாய்ப் பாட
வரமருள்வாய் மோன குருநாதா யென்றும்
தருமநெறிதவறும் லேனை நீகாக்கத்
தடையேது உமதடிமை யேளை யானும்
அருளுமெனக் கருளுமென்றே துதித்து நிற்க
அய்யகரர்க்கு இளையவனே கிருபைசெய்வாய்

திருப்பரங்கிரி வாசா யென்ற வர்ன மெட்டு
இராகம் சுத்த நாமகிரியை தாளம் ஆதி
பல்லவி

14 செந்தினம்பதியீசர தெய்வானை மகிளுமநேசா (செந்)

அநுபல்லவி

வந்தபத்மசூரனை முந்தவதைத்த நேயர்
வரமருளே தருவாயோ கசகாயா
அந்திமதியணிந்த சுந்தரர் மகின் சேயா
அருளையுடனேயென் முன்வாவடி வேல் தூயா (செந்
மாதர்வை போகத்தில் மயங்கவை யாதே
மனதிற்கவலை தன்னை நோகச்செய்யாதே
சூதுசெய்வார்களுட உறவு மாகா தே
தொல்லைவினையகற்றிச் சுகந்தா இப்போதே (செந
பொய் சூலை களவுகள் செய்பவர் நேசம்
புகளுடனே வைத்திடில் வருந்தன நாசம்

மைவிழிமாதர்வலை சிக்கினல் மோசம்
வருமென்றுபசரித்தார் பெரியோர்களிதி காசம்
பூதலந் தன்னிலிருந் திடுவது மாயம் (செந்
பொய்வாழ்வை நினைத்திடில் வருகுமபாயம்
சோதனை செய்திடுஞ் சிவனுருபாயம்
சோலைசாமி தமிழுக் கருளுஞ் சகாயம் (செந்

திருவையணி மார்பா யென்ற வர்ன மெட்டு
இராகம் செஞ்சுருட்டி தாளம் சாப்பு
பல்லவி

கருணைபுரிந்தாளுங் கங்காதரன் மகனே (கரு (15

அநுபல்லவி

தருணந்தருணமே சண்முகக் கந்தனே
தற்காத்தருள் புரிவாய் தினந் தினந் தற்காத் (கரு

கானகத்தில்க் குறமானைப் புணர்ந்தவா
கார்த்திகேயக்குமரு கதிரவா காற்தி (கரு

செந்தினம் பதியிலன்பது புரிந்த
செவ்வேளறுமுகனே ஜெகப்புகழ் செவ்வே (கரு

பன்னிருகரனே பக்த ரட்சகனே
பாலன் சோலைய்யா உன்னைப்பணிந்தனே பாலன் (கரு

திருமால் மருமகனே யென்ற வர்ண மெட்டு
இராகம் தேசிகம் கமாஸ் தாளம் ஆதி
பல்லவி.

சத்திவடிவேலா அநுகூலா உமை பாலா முன்னஞ்
சண்டனையுதைத்த சிவசங்கரனுர் புத்திரனே (சத் (16

அநு பல்லவி

வர்னமயில் வாகா வளர்யோகா வள்ளி பாகா கரி
கரிவாரணந்தனக் கிளைய சூரனை செயித்தசிவ (சத்

செந்திநகர் வாசா உயர் நேசா பிர காசா அன்று
தென்பரங்கிரியதனி லன்புடனே வாழும்பரா (சத்

வேங்கை மரமாகி வனமேகி மையலாகி வன
வேடர்பதிவீற்றிருந்தபேடையர்மேலாசைகொண்டசத்
புவியோர் புகழ்தேசா புரவாசா முருகேசா உம்மைப்
போற்றுஞ் சோலை தாசன் பணிந் தேற்றினேனனு
தினமுஞ் (சத்திவடி

ஸ்ரீ ராமச்சந்திரனே யென்ற வர்ன மெட்டு

இராகம் நாட்டை தாளம் ஆதி

பல்லவி

தென்கழுகு மாமலையி லன்புடனே வீற்றிருக்குந் (17
தேசிகா அருள் புரிய வா வா வா
தேடினேன் துதி பாடினேன் (தென்

வள்ளிமகிழ் காரணனே வந்தருள் செய் பூரணனே
புள்ளிமயில் வாகனனே வேல் வேல் வேல்
போற்றியேயருள் சாற்றினேன் (தென்

சத்தியருள் பாலகனே சண்முக னெனுங்குகனே
சித்தமுட னேழையைக்கண் பார் பார் பார்
சாமியே உயர் நேமியே (தென்

சங்கரனார் புத்திரனே சத்திவடிவேலவனே
நித்தமும் உனது பதந்தா தா தா
தாவியே மிகக்கூவினேன் (தென்

சாந்தகுணமே பெருகுஞ்சண்முகா உனைப்புகழுந்
தாசனுஞ் சோலை தமிழைக்கார் கார் கார்
சாதுயர் பணி நீதனே (தென்

கங்காதரன் பாலா யென்ற வர்ன மேட்டு

இராகம் சங்கரா பரணம் அடதாளம் சாப்பு

பல்லவி

சத்தி வடிவேலா தற்பரனார் பாலா (18
நித்தமருள்தாரு யுத்தமனே வாருய் (சத்தி

தெய்வானையோகா தீமை வை போகா
வையகம்புகழும் மெய்யனே வீற்றாளும் (சத்தி
சூரர்கள் சம்மாரு தொல்லை துள முதிரு
நாரணன் மருகா நாதனே முரு (சத்தி
செந்திநகருளுங் கந்தனே யெந்நாளும்
மந்திர முள்ளோனே சுந்தரன் மகனே (சத்தி
சாமிநாதர் சீசன் தமிழ்ப் பிரகாசன்
பூமிபுகழ்வாசன் போற்றுஞ் சோலைதாசன் (சத்தி

சோம சேகரனருளும் யென்ற வர்ன மெட்டு
இராகம் தேசிக தோடி தாளம் ஆதி
பல்லவி

செந்திநகரந்தனில் வாழ் கந்தா கந்தா உயர் (19
தேவிபார் பதிமகிளும் மைந்தா மைந்தா திருச் (செந்
சந்ததம் புகளுங்கந்த நாதா நாதா யேனை
சாற்றியேயருளுங் குருபாதா போதா உந்தன்
சிந்தையிரங்காத தென்ன வாதா சூதா இனிச்
சீக்கிரமருள் தருவாய் நீதா கீதா திருச் (செந்
சங்கம்புகழ் போற்றும் அனுகூலா கூலா குற
மங்கைவள்ளி சாற்றும்வடி வேலா வேலா திருச்
செங்கைதன்னில் வேலையேந்தும் பாலா பாலா தேவர்
சித்தமதை யேயரியுங் கோலா கலா திருச் (செந்
ஞானவதைத்தபரி சுத்தா சுத்தா சோம
சுந்தரனார் பெற்றகுரு முத்தா முத்தா தினம்
வாருமெந்தன் முன்னதாகப் பக்தா பக்தா வினை
தீருமே யெனையருளுஞ் சித்தா சித்தா திருச் (செந்
தங்கும் வெங்கடேசுரபுரம் வாளும் வாளும் சிறு
தாசன் சோலைபாடுந்தமிழ் கேளும் கேளும் அரு
ளெங்கினும் புகழ்உன்னை நாளும் நாளும் என்னை
யேற்றியே மேலாம்பதங் கொண்டாளும் ஆளும்; (திருச்செந்

எனையாண்டவா யென்ற வர்ன மெட்டு
இராகம் சிந்து பைரவி தாளம் ஏகம்
பல்லவி.

வடிவேலனே வள்ளிபுகழுஞ் சீலனே (20)
வித்தகியான தோர் சத்திபுதல்வனே
வேலனே (வள்ளி

கோலாகலா மயிலிலேறும் உல்லாசனே
கூறினேன் கூறினேன் கூறினேன் கூறினேன்
கோதைவள்ளி தெய்வயானையே போற்றிடும்
நாதனே மாமலர்ப் பாதனே நீவடி (வேல

சுந்தரமான திருச் செந்தூரில் வாழுஞ் சிவ
சுத்தனே சுத்தனே சுத்தனே சுத்தனே
சோமசுந்தரன் மைந்தனே வந்தருளெந்தனைக்
கந்தனெனும் பெயர்வந்த திருவடி (வேல

சேவற்கொடியுடனே வாவா குகா முருகா
சீலனே சீலனே சீலனே சீலனே
தீரனெனும் பத்ம சூரனையே வதை
செய்து மகிழ்ந்த யீராறு கையாவடி (வேல

பாண்டிதேசந்தன்னிலே வாழ்பாலன் சோலைதாசன்
பணிந்தேன் பணிந்தேன் பணிந்தேன் பணிந்தேன்
பச்சமயிலேறும் உச்சித மானவா
கெச்சித முடனே இச்சணம் வாவடி. (வேல

மாதேஉனைப்பிரிய யென்ற வர்ன மெட்டு
இராகம் இந்துஸ்தான் கபாய் தாளம் ரூபகம்
பல்லவி.

நீவா ஆறுமுகனே புள்ளி நீல மயில் மீதேறிய (21)
கோலாகல வடிவேலனே (நீவா

அநு பல்லவி.

தாவாயருள்புரி தேவா மனந்தேறி
அஞ்சயலர்ப் பாதம் அஞ்சலுடன் தாரும் (நீவா

சரணங்கள்.

சேவற்கொடி யுடையா உந்தன் சேவடியே
மேவித்துதி கூவிய ஏழைக்குங்கதி சேவற்
யாவர்பணிந்திடும் அய்யா முருகனே
அன்புமிகுந் திருமாலின் மருகோனே (நீவா

செந்தூர் வாளுங்குமரு யெந்தன் சித்தந்தனிலே
குடிகொள் நித்தந்துதி செய்தேனருள் செந்தூர்
அந்திமதி சூடுஞ் சுந்தரன் மைந்தனே
ஆனைமுகன் தம்பியாகிய குகனே (நீவா

சந்தவரைமகிழ வந்தஜகதீஸ்பர முருகாஉனை
மறவாமலே நிதமேதுதி சந்த
சொந்தம் பாராட்டியே யெந்தனைக்கண் பாராய்
சோலைசாமி பணிந்தேற்றுங் குருபரா. (நீவா

மன்றுளாடியவா யென்றவர்ன மெட்டு (22)
இராகம் தேசிகதோடி தாளம் ரூபகம்.

பல்லவி.

செந்தில்வாழ்பவாவேலாசெந்தில் வாழ்பவா அன்று
அந்திமாமதி யணிந்தசுந்தரே சர்தன்சுதனே (செந்

அநுபல்லவி,

மூந்த மறலியைக் கொன்றவர் பாலனே
மூலாதரான் தம்பியாகிய சீலனே
வந்தவினை தீர்க்கவா வடிவேலனே (செந்

வரதப்பெருமாள் மருகா தருணம்யெனையாள் முருகா
வர்ணமயிலேறி வந்திடுங் குமரா
வள்ளிதெய்வயானை போற்றுங் குருபரா
அன்னைபரா சத்தி வாழ்த்துந் தயாபரா (செந்

அடியார்வினை தீர்க்குங்குரு பரனேஉனைமறவேனருள்
சூரசம்மாரங்கள் செய்து மகிழ்ந்தவா

சுந்தரிபாலனே யெங்கும் நிறைந்தவா
வாரைப்பொருந்திடுங்கொங்கைவள்ளிபாகா (செந்
வடிவேலொடுவருவாயுனதடியே னுடதுயர்தீர்த்திடச்
தற்பரனுர் பெற்ற அற்புத மைந்தனே
தற்காத்தருள் புரிசண்முகக் கந்தனே
சொற்பனந் தன்னிலு முன்னை நினைந்தனே(செந்
சோலைதாசன் அருளிய வேலாயெனையாளாய் சிவ

மறவாதே மூடமதியே யென்ற வர்னமெட்டு.
இராகம் நாதநாமக்கிரியை தாளம் ஆதி.
பல்லவி.

வருவாயே ஆறுமுகனே வடிவேல் கரத்தேந்திடுங்குகனே வரு) (23)

அனு பல்லவி,

குருவேஇன்ன மிந்தக்குவலயம் வந்திடாமல்க்
கொற்றவனே யருளாய் வந்து
திரளாய் வருந்திவினையை யுகந்து
நீமகிழ்ந்து நான்புகழும் முறையறிந்து (வரு
பரமானந்த மென்னும் பக்தரட்சகா நிதம்
பழனியம் பதிதனில் வாசா
குறமான் வள்ளிகோரிடும் முருகேசா
கூரீசா வரந்தருஞ் சுயம்பிர காசா (வரு
சூரசம்மாரு யோகா சோலைதாசன் பணிந்து
தோத்திரம் செய்ய இங்குவாருய்
தாருயணன் மருமகனே கண்பாருய்
மனந்தேருய் மகிழ்தருளு முன்பதந் தாருய். (வரு

ஆயேசையா யென்ற வர்ன மெட்டு.
இராகம் பியாக் தாளம் ஆதி.
பல்லவி.

கந்தநாதா கருணைபுரிந்தா காரும்வினையைத் தீர்பாதா கந்) (24)

அனு பல்லவி.

சந்தவரை மகிழ வந்தா ளறுமுகனே
சங்கர னென்னும்பாலா ஐங்கரர்க் கனுகூலா

மங்களமான லோலா
சரணமது புரிய அருள் தரு மெனவேஉனை மறவேன்

புள்ளிமயிலில் வாரும் வள்ளிதெய்வானை கோரும்
பொன்னடி தாரும்யீசா யென்னையாள் பிரகாசா
நன்னகர் செந்தி வாசா
புரவலரும்புகள் முருகாதரு மூனதுபத மதையே(கந்

சோலைதாசன் புகலும் வேலாவர மருளும்
சுந்தர முருகையா யெந்தனையாளும் மெய்யா
மைந்தனுக் கருள் செய்யா
சுரமுனிவர் பரவியவா யெனையருளுங் குருபரனே(கந்

ஆசிரிய விருத்தம்.

எப்போதும் உமதுடையகமல பாதத்தையே (25)
யெனதுளமதில்ப் பதித்து
இதமான செண்பகம் முல்லையொடு கஸ்தூரி
இருவாச்சி மலர்கதம்பம்
செப்பமுடனே மருவுமல்லிகை செவ்வந்தி
திரளான கொன்றை வில்வம்
திகளுமலருத்தியுந் தும்பையருகது கொண்டு
தினமேதுதிக்கு மடியேன்
அப்பனேசெந்தி நகருள்பவா வந்தருளும்
ஆலமதையுண்ட வாழ்வே
அரளருளுமறுமுகா மௌனகுரு தேசிகா
ஆனந்த மானகுகனே
சொற்பனந் தனிலுமுன் பாதந்துதித்திடும்
சோலைதாசனையாளு வாய்
சுத்தபரிபூரண நித்தனருள் பாலனே
தோகைமலைமேவு குமரா.

பழனியாண்டவனே யென்ற வர்ன மெட்டு.
இராகம் தோடி தாளம் ரூபகம்.
பல்லவி.

செந்தூருண்டவனே உனதுட திருவடி மலரனுதினம்பணி (26)
குருபரசிவ சறவணபவ சித்தமருள்க் கொடு
உத்தமசத் தியருள்க் குருசித்தனே (செந்தூர்

அனு பல்லவி

சந்தவரை மகிள்ந்தன்பு கொடுத்தவா
தாசன் சோலைசாமி தன்னைநே சித்தவா
கந்தனெனுந் திருநாமந் தரித்தவா
கதிரேசனே வரமேகொடு அதிவானவர்துயர் நீக்கிடு
கானமாமயில்க்குகந்த மோனமே மிகச்சிறந்த
காரணமான சருசரபூரணஞான பருபற
கற்த்தனே சித்தனேபக்தர்கள் நித்தமும் வெற்றி
யளித்திடு மெய்த்திருச் (செந்தூர்

தென்பழனுபுரி மேவுங்குமரனே
சேவடிபோற்றிப் பணிந்தே னைய்யாரனே
அன்புமிகத்தாரும் ஆறுமுகத்தோனே
ஆனைமாமுகற்கிளைய ஞானமே உமைப்பணிய
ஆதரவேது மிலாமலே ஓதிடுமடியவர் பாலே
ஆறுமாமுகா உனதுபாதமே யெனக்கருளும்
அச்சுதர் மெச்சிடுகுருபர கெச்சிதமருள்
கொடு உச்சிதச். (செந்தூர்

கோஞ்ச மேனும் யென்ற வர்ன மெட்டு.
இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் ரூபகம்.
பல்லவி.

தேசிகா உந்தன் சித்தமிரங்காதா வாருஞ் (27)
ஜெகதீஸ்பர முருகேசனே (தேசி

அனு பல்லவி.

மாசில்லாதமோண மந்திரமானவா (தேசி
மயிலேறியேவருவாய்சரவணனே உனதருள்தாவென

வாதுசெய்யாமலே வந்தருள் மெய்யனே (தேசி
வனவேடர்களுனைநாடிடவரி வேங்கையின்மரமாகிய
சோலைதாசன் பணிந்தேற்றுஞ் சிலம்பனே (தேசி
சுரசேவிதபுதல்வா வுனைமறவாதவர் பதம்நாடியே

(28) வேலனே இந்த வினைனை என்ற வர்ன மெட்டு.

இராகம் – தேசிகம் – தோடி – தாளம் – ரூபகம்.

பல்லவி.

கந்தனே யிந்தக் கள்வனை யேன் படைத்தாய் [முழுக்
அந்தக் கருணாகர னடிமாமலர் பணியாதவ னிருமா

அனுபல்லவி.

அந்தரர் விண்ணவர் யாவரும் போற்றிடும்
அறுமாமுக வடிவேலனை யொருபோதிலும் நினையாமுழுக் (கள்)

சரணங்கள்.

எப்போதும் காசு பணந்தன்னை நினைந்து
ஏராளமாகத் துற்செய்கையை யுணர்ந்து
அப்பாவுன் பாதம் பணிவோரைச் சினந்து
அதி வீனமேகொடு மானிடருடனே திரிபடு மாமுழுக் (கள்வ)

செந்தமிழ் சோலையா சங்கீதம் பாடினேன்
சித்தம்வைத் தாளுமென்றே வுன்னை நாடினேன்
பந்தபாசத்தினால் நொந்துமே வாடினேன்
பரமைந்தன கரிமாமுகனுட சேவடி பணியா முழுக் (கள்வ)

(29) இராகம் - சுருட்டி - தாளம் - ஆதி.

பல்லவி.

வாவா வேலய்யா வர்ண மாமயில் மீதேறி (வா)

அனுபல்லவி.

சேவற் கொடிதுலங்கத் தேவ ரருளிலங்கச்
சித்தர்கள் முத்தர்கள் பக்த ருனைத்தொழ
அத்த னருள்க்குரு வெற்றி வேலாயுத (வா)

அத்தி முகற்கிளையா ஆதரித் தருள் நேயா
அரனருள் குருபர சரவண பவசிவ
ஆறு முகத்திரு நீறணி முத்தயா (வா)
செந்திலம் பதியீசா தெய்வகுஞ் சரிநேசா
திருவடி ஸ்ரீதமுமே தொழுதிடு மடியவர்
உனதிரு பதமல ரனுதின முந்தர (வா)
தருணங் கருணைதாருந் தாசன் சோலையா கோறும்
தகஜெக தளாங்கு தச்சந் தரிகிட
ததிங்கிண தாத்தாந் தைத்தோ மெனவே (வா)

(30) கந்தனே என்ற வர்ன மெட்டு.

இராகம் - பைரவி - தாளம் - ஏகம்.

பல்லவி.

வடிவேலா வள்ளிமரு வனுகூலா வல்லபையாளுட பாலா
வந்தருள் தந்திடுஞ் சுந்தரன் மைந்தனே கந்தனறு முகா (வடி)

அனுபல்லவி.

அடியேனை யாதரிப்பாய் முருகோனே
அன்பர்புகழ் பெருமானே
அன்றர னிடமே சென்றுபிரணவங் கொண்ட குருபரா (வடி)
ஜெகதீசா செந்தி நகர்ப்பதி வாசா
தென் கழுகுமலை யீசா
சித்தமருள்கொடு எத்திசையுந் துதி சத்தி யருளிய (வடி)
திகழ்வாசன் தென் நெலுங்குகுல நேசன்
சித்தர் புகழ்பிர காசன்
தேசிகன் சோலையா வாசமுடன் பணிந்தாசையாய்ப் போற்றிடும்

(31) வருவாய் செந்தில் என்ற வர்ன மெட்டு.

இராகம் - பங்காளா - அடதாளம் - சாப்பு.

பல்லவி.

திருமால் மருமகனே கண்பாராய் தினஞ்
சித்தம்வைத்தே உன்னைப் பத்திசெய்தே னருள் (திரு)

அநுபல்லவி.

கருணை தந்தே யென்னைக் காருங் குருபரா
காதல் வள்ளியுட பாகனே ஒப்யாரா
தருவா யுன்னடி தாளிணையே நேரா
தாமோ தானருள் வேலனே பூமா பதியுட பாலனே. (திரு)

சாது சங்கம்பணிந் தேற்றுங் குமரனே
தருணம் எனையாளும் பன்னிரு கையனே
பாதுகாருங் கான மாமயில் வாகனே
பகவானருள் மகனே கெதி தருவாயென நிதமே துதி (திரு)

தென்பரங் குன்றுறை தேவர்சே னாதி பா
சிந்தை தனிலிருந் தன்பு கொடுக்க வா
துன்பந் தீவினையை யின்பமாய்த் தீர்ப்ப வா
சோலைப தாசன் துதிவடி வேல்முருகேசா வுனதடி (திரு)

(32) சிவசுப்பிரமண்ய சிவனே யென்ற வர்ண மெட்டு.

இராகம் — புன்னக வராளி — அடதாளம் — சாப்பு.

பல்லவி.

அருள்தா வீராறு கையனே யெனையா தசித்திடு நேசசற்குண ()

அனுபல்லவி.

கருணை தந்திட வேணு மென்றுமே
கதிரவாவுனை மேவினேன்
கனக மயிலொடு வருகு சுந்தர
வுனது செந்திரு வடிகள் நாடிட (அரு)

சரணங்கள்.

தெய்வ குஞ்சரி யோக நாயகனே
செந்தியி லுயர்சைவ காரணமான சண்முகனே
திடமுலாவிய மகுட சூரனை
தொடியிலே வதைசெய்த வீரனே
மனதுடன் துதிபோற்றி செய்யவே
யெனது புத்தியி லாழ்த்தி நின்றிடு (அரு)

வெற்றிவேல் முருகேச முத்தயனே
வித்தகி யெனுஞ்சத்தி பார்பதியாள்தன் புத்திரனே
மேவு செந்தியி லாதி நாயக
மானமந்திர மோனமே சுக
விரிகவித் தமிழ்சோலே தாசனே
யதிகமுற்றுமே பாதுகார் சிவ (அரு)

(33) ஞான தேசிகா என்ற வர்ன மெட்டு.

இராகம் - இந்துஸ்தான் - தோடி - தாளம் - சாப்பு.

பல்லவி.

வா குகா முருகா வந்தருள் புரிததி (வா)

அனுபல்லவி.

பாகு கனிமொழி மாதுயர் கோதையர் போற்றிட (வா

சரணங்கள்.

மறை முடிவதனில் விளங்குஞ் சீலனே
மங்கை வள்ளியொடு வாரும் வேலனே
மந்திரமான வை போகனே
சுந்தர வள்ளியர் பாகனே
பரமநாயக நருமை மைந்தனே
பாது கார்த்திட வேணு மெந்தனே
பக்தர்கள் போற்றிய சித்தனே
அத்த னருள்க்குரு முத்தனே
சோலேசாமி தமிழ்க் குகந்தவா
வேலவா யனுதித்தம் வாய்ந்தவா
சூரனே வெற்றிய லோலனே
ஆரணியாளுட பாலனே.

(34) பரமானந்தமென்ற வர்ன மெட்டு.

இராகம் - தேசிக தோடி - தாளம் - ஆதி.

பல்லவி.

சுரசேவித புதல்வா வேலா சோலேயா போற்றுஞ் (சுர

அனுபல்லவி.

சூரனுடலேவதைத்தை செய்தோனே
தோகை மாமயில் மீதினில் வருவோனே
நாரணனு ரருள் மருகோனே நிதம்
நம்பும் ஏழை யுனேயே பணிவேனே. (சுர)

அறுமா முகனே பரங்குன்று அரனருளுங்
குமரா பழனிமலே நின்று யருள் புரிவாய்
மூனமே வனமதனிற் சென்று யெனக் கருளுங்
குகனே வருவாய் மிகநன்று கோலாகலனே.
குன்று பரங்கிரி யமர்ந்தா
வினையகல வந்தா
கருணாகரன் மைந்தா அருணகிரிக் கந்தா
உனதுபதந் தந்தா நின்னடி மலர்ச்
செங்கைவடி வேல் இலங்கும்
மங்கை குறவள்ளி பங்கா (சுர)

(35) ஆசிரிய விருத்தம்.

அருணகிரி மேவுசிற் றம்பலவர் பாலனே
ஆறுமுக மான வேலா
அரகர சிவாவென்று தினமுமருள் செய்திடும்
அன்பரைக் காக்க வல்லாய்
குறவர்பதி வீற்றிடுங் கோதைமய லாகியே
கொண்டுநீ வளையல் விற்றாய்
குறைதனே யகற்றவா குஞ்சரங் கோதைபணி
கொற்றவா வுனது பாதம்
திருவையணி மார்பனே குமரகுரு வேநினது
திருவருட் கமல மறவேன்
தினமுமடி யார்கள்பணி ஜெயவரத சண்முகா
சித்தம்வைத் தாளு முருகா
தருணமிது வேளேயே கருணைபுரி நீதனே
தாசனுஞ் சோலே போற்றத்

தரிசனந் தந்தாளு மருள்பரங் கிரிஞான
சரவண பவானந்த னே.

(36) இன்னமுங் கோபமா என்ற வர்ன மெட்டு.

இராகம் - ஆனந்த - பைரவி - அட-தாளம் - சாப்பு.

பல்லவி

வந்தருள் புரிவாய் வடிவேல் முருகா மாயோன் மருகா (வந்)

அநுபல்லவி.

நானுந்தன் பாதமே சொந்தமென் றேனே யெந்தவேளையும்(வந்)

சரணங்கள்.

செந்திநகர்ப்பதி மேவிடுங்குகனே
சேவற்கொடிபிடித் தாளாறுமுகனே
சந்தவரைதன்னில் வந்ததேசிகனே
சாற்றும் ஏழையுன்னைப் போற்றிப்பணிந்தேனே

சரவணனே யருள்புரிவா
யரிமருகா கதி தருவாய்
குருபரனே யென்னை மறவாய்
குறமகள் மருவிட வருவாய்
கோலாகலனேயாளாய் நீயென்னை வேலாதருணம்(வந்)

தேசாதிபர்குல வாசகனுஞ்சோலை
தேசிகன்பாடிடுஞ் செந்தமிழ்ப்பாமாலை
யீசாபரங்குன்றி லாதிபனேவேலை
யிருகரந்தன்னிலே தாங்கியவாமேலே

இறையவ னாருள் மகனே
கரிமுகனுக் கிளையவனே
வரமதுதா ஆறுமுகனே
மரகதமயில் வாகனே
வாராயுன்பதந் தாராயெந்தனைக் காராய்கந்தனே(வந்

(37) சற்சனர்கள் கொண்டாடும் என்ற வர்ன மெட்டு.
இராகம் — எதுகுல காம்போதி — தாளம் — ஆதி.

பல்லவி.

வர்னமயில் வாகனு வாதுசெய்ய லாகுமா
ஆகுமா செய்ய லாகுமா (வர்ன)

அநுபல்லவி.

சென்னிநகர்மேவுகின்ற தீனதயாபரனே
சித்தாவாமுத்தா உன்பக்தன் பதம்பணிய (வர்ன)

கண்ணனருள் தன் மருகா கார்த்திகேயா முருகா
கந்தாமுன்வந்தா நின் சந்நிதமேபோற்றினேன் ()

அன்பா யெனக்குகந்த ஆறுமுக மாய்வந்த
அய்யாவா மெய்யா நீ ஆதரித்தருள் புரிய (வர்ன)

பாவலர்கள்போற்றுஞ்சோலை நாவலனியற்றும்நூலை
பாதுகார் நீதா வுன்பாதமேகொண்டாடினேன் ()

(38) காவடிச் சிந்துகள்.

மஞ்சுநிகர் குந்தளமென்ற வர்ன மெட்டு.

சந்தவரைவந்தகுகனே சண்முகவேலாசந்தியின்பாலா
சாற்றுவேன் அமாமுகனே அன்று
சந்தனுசலமாநகரி லந்தமுடனேயமர்ந்த
சங்கரனார்பெற்றமுருகா அரிமருகா ஞானதேசிகா
சற்குருவேயென்முன் வாயோகா
வந்தருள்செய்குவாய்குமரா வள்ளிபுகழ உள்ளமகிழ
வர்னமயிலேறிய வீரா குற
மங்கைநாயகி மருவிடுந்திருச்செங்கை
வடிவேல்துலங்கவந்திடுவாய்பன்னிரண்டுகையனே
வரமருள வுலைப்புகழ வஞ்சிதெய்வ குஞ்சரியாள் பாகனே
செந்திகாவளவந்தவா சேவற்கொடியும் யாவர் பணியும்
சித்திரவளையல் விற்றவா வனம்

தேடிவேடர்களாடிமுந்துதிகூடி
யொருபுறமாக நின்று நீசிக்கிரத்தில்
வேங்கை மரமாகியே சித்தர்கள் போற்ற மற்றவர் சாற்றத்
தேசிகன் சோலையா மகிழ்வாகியே.

(39) தெள்ளுதமி ழுக்குதவு என்ற வர்ன மெட்டு

தென்கழுகு மாமலைவா ஸ்ரீசா உயர்
தெய்வயானைவள்ளி மகிழ்நேசா அருள்
சித்தமுட னேபணிய அத்தனருள் புத்திரனே தீரா அதிவீரா
வர்னமயி லேறுமுரு கையன் தேவர்
வானவர்கள் போற்றியதோர் மெய்யன் மிகு
மகிமையுட னேவந்து பரகதியே தருவாய் சேர்ந்தா வள்ளிகாந்தா
சங்கரி கபாலியருள் பாலா
பரா சத்திவடி வேலா அநுகூலா
பதிசந்தணு சலத்திலுயர் கந்தநாத னேவருவாய் சாமிவுயர் நேமி
சாமிநாதர் போற்றும்பிர காசன் வெகு
சந்தத் தமிழ்பாடுஞ் சோலை தாசன் இந்தத்
தாரணியி லன்புடனே காரணமாகப் புகழும் நேசன்விசு வாசன்

(40) செந்தின்மாநக ரந்தனில் என்ற வர்ன மெட்டு

சந்தணுசல மேவுங் குருபரச் சண்முகனும் வடிவேலன் உயர்
சத்தி பயிரவி பாலன் சிவ
சங்கரர்க்கொரு மைந்தனாகிய
செங்கையில்த்திரு வேலிலங்கிய
சாமியேயருள் தாவெனக் கூவிடத்
தன்னருள் செய்யனு கூலன்
வெகு உன்னதமாகிய சீலன்
தெய்வ குஞ்சரிவள்ளி மகிழ்ந்திடுந் தேசிகனுங்குமரேசன் திரு
வேரக மேவிய வாசன் அன்று
செந்தினம்பதி வந்திடுஞ்சிவ
கந்தநாதனே வுந்தனைத்துதி

சேவைவ்யே செய்யும் ஏழையென் மீதினில்ச்
சித்தம் வைத்தாள் முருகேசன் தினம்
பக்திசெய் வாருட நேசன்

சோலைசாமிதமிட்பதம்பாடியதொண்டர்கள்போற்றியநீதாபண்டு
சூரசம்மாரனே நாதா இளந்
தோகை மாமயில் வாகனன் கழு
காசலம்பதி வாசமே புகழ்
சுந்தராவருள் தந்திடு வாயெனத் தோத்திரஞ்
செய்யும்பொற் பாதா
யாவர் சாற்றிப்பணியும் பிரக் யாதா

(41) சீர்வளர் பசுந்தோகை என்ற வர்ன மெட்டு

தென்பழனி மாமலையில் வாசா
வளரும் யீசா அடியார் நேசா ஞான
தேசிக னெனுங்குமர வேலுமுரு கேசா

அன்பர்புகழ் போற்றிடும்நல் வீரா
அதிகநேரா பதமேதாரா என்னை
யாதரித் தருள்புரிவாய் நாதனே ஒய்யாரா.

சரவண பவானந்த தேகா
மகிழ்விசாகா புகழும்யோகா ஏழை
சாற்றியருள் போற்றும் புள்ளி மாமயிலின் வாகா

அண்டர்கள் சேனாதிபனே கந்தா
வரமிகுந்தா அரனார் மைந்தா அன்று
ஆதிசிவ னாரிடமே பிரணவ மறிந்தா.

செந்திநக ராளுங்குகச் சேந்தன்
மங்கை காந்தன் கங்கை மைந்தன் வித்வ
தேசிகனுஞ் சோலைதமிழ் கார்குறிஞ்சி வேந்தன்

[42] காணவேணுங் காணவேணுமென்ற வர்ன மெட்டு.

கண்ணிகள்.

ஆளவேணும் ஆள்வேணுங் கந்தா என்னை
யாதரிப்பா யீஸ்பரனார் மைந்தா முன்னம்
அந்தரதேவர்கள் போற்றச்சந்தவரை
வந்தவனே அய்யா அருள் மெய்யா.
நாளுங்கதிர் காமமதில் வாழுங் குக
நாயகனே யென்னைவந்து ஆளும் அரி
நாரணன் மருகாவந்து காருமே யிதுதருணம்
நாதா பிரக் யாதா.
வேலாயுத மேந்துந் திருக்கையா மிக
வேண்டியருள் செய்தேனுன்னை மெய்யா திரு
வேரக மமர்ந்திடும் நல்வீரனே
வந்தாதரிப்பாய் விமலா பணியமலா
எப்போது முன்பாதந் தன்னைத் தேடி நல்ல
இன்பரச சங்கீர்த்தனம் பாடி வெகு
இன்னிலம் புகழுகின்ற நன்னயஞ்
சேரித்தமிழின் வாசன் சோலைதாசன்

(43) பகவதி நித்ய கல்யாணி யென்ற
வண்ணச் சந்த வர்னமெட்டு
இராகம் - மால் - கோஷ் - தாளம் - ஆதி.
கண்ணிகள்

அறுமுக சரவண தேசிகா உன
தடியிணை தொழுதிட வாகுகா மிகு
அருமறை சுருதிகள் பலகலை தெளிவொடு
அறியுமடியவர்கள் பாதமே தொழ
மரகதமயில் முருகேசனே துதி
குறமகள்மருவிய நீதனே இது
தருணமருணகிரி பரமனருளு மொரு பாலனே
உயர்மேவிவும்மைப் போற்ற வருள் தாருமே.

அழகுயர் சித்திர வேலனே சிவ
அரனுட புத்திர லோலனே தி
யருளுமருளுமென நிதமுமுனது திருவடிகள்
பணிவர் குறைதீர்த்திடுஞ் சுர
ரமரர் பணிந்தருள் சாற்று தந்திர
குருமுனிவர்க் குபதேச மந்திர
மதனையொரு நொடியி லதிகவிரை வுடனே ஓதிடுங்
கதிரேசனே வந்தாளுமிது வேளையே.

ஜெகமது புகழ்கொடு வெங்கடேசுர தக
ரதுதங்கிடு மிங்கிர்தத் தமிழதனை
யறியுமொரு சிறுவனெனினுமுரை யெவருமனமகிழ
யேற்றியே யிசை
இதமொடு சாற்றிய கீர்த்தி வாசக
னிதனையியற்றிய சோலை தேசிக
னெனதுகுறையதனையதிக துரிதமுடனகலவுதவியருள்
மாயர் மருகோனே வரந் தாருமே.

(44) வேண்பா.

வையா புரியில் வளருங் குருபரனே
அய்யா சிறுவனையே யாதரிப்பாய்—ஒய்யார
வர்ன மயிலேறி வரவே யிதுசமயம்
மெய்யா அருள்செய்யவே தான்.

45) நொண்டிச் சிந்து.

அருள்பெருந் திருச்செந்தி நகரதி
லன்பாக வாழ்ந்திடு மறுமுகனே
கனமாய் மயூரகிரி மயிலை
கயிலை நிகராருணை பழனி மலை
இதமுடன் சோலைமலை தோகைமலை
எட்டுகுடி சிக்கலூர் வேளூரும்

ஈழநாட்டுக் கதிரை போரூ
ரிச்சையுடன் பரங்குன்றம் குமரகோட்டம்
திடமுடன் கொடுமளூர் மேருகிரி
சென்னிமலை திருத்தணி கயிலைமலை
வடவேங் கடந்தனிலும் மேலவயல்
வளங்கிடுஞ் சோணசலங் கழுகுமலை
இப்பெருந் தலங்கள்தனிலே யிருந்திடும்
இறையோ னருளுங் குருபரமுருகா
செப்பமுடன் தமிழிசைக்குந் திவ்யகுண
தேசிகனுஞ் சோலையனுக் கருள்தருவாய்
தந்தின தனதானே.

(46) ஆனந்தக் களிப்பு.

வெற்றிவேலா முருகையா வுன்னை
வேண்டித் துதிக்கவரமரு ளய்யா (வெற்றி)
பற்றினேனுந்தன்மே லன்பு யென்னைப்
பாராவிடில்மிக வந்திடும் வம்பு
முற்றிலுமுன்னையே நம்பும் இந்த
மூடனுக்காகவே வந்தருள் சம்பு (வெற்றி
சம்புசதாசிவன் பாலா! யேழை
சாற்றிப்பணிந்திட வாவடி வேலா
அன்புமிகத்தாருஞ் சீலா யென்னை
யாதரிப்பா யாறுமாமுக வேலா (வெற்றி
ஆறுமுகமு மீராறு கர
மன்புடன்தோன்றவே வந்தருள் கூறு
கூறியேவுன்பதஞ் சேரு என்னை
குற்றங்கள் செய்தாலகற்றிக்கண் பாரு (வெற்றி
பாரும் பரங்கிரிக் கந்தா நிதம்
பக்தர்கள் போற்று மரனுட மைந்தா
தீரும் வினையது கந்தா தமிழ்
தேசிகன் சோலையா போற்றவே வந்தா (வெற்றி

47) திருப்புகழ்.

மாயவாடை என்ற வர்ன மெட்டு.

தென்பரங்கிரி மேவிய வாசனே தெய்வ
குஞ்சரியாளுட நேசனே சித்தம்
வைத்தருள் தாமுரு கேசனே வடிவேலா
செங்கரந்தனில் வேலுட லேகியே செய்ய
தாருகா சூரனைத் தாவியே
சீக்கிரம்வதைசெய்த ஓய்யாரனே— குமரேசா
மையல்கொண்டு வனந்தனிலேகுற
மங்கைதாயகி வள்ளியையன்புற
வந்துகூடிய சிந்தையருள்தரும்— முருகோனே
மைவிழிவலை சிக்கியலைந்திடும்
மட்டிமானிடர் தன்னையுறவென்று
வந்துகூடி யிருந்திடும் மூடரின்— உறவாமோ
அந்திமாமதி சூடியசங்கரர்
மைந்தனாகிய செந்திலழகக்
கந்தனே துதி வந்தருள் செய்குவாய்— கதிரேசா.
ஐங்கரன் தம்பி மாமுகனுக்கிளை
தம்பியாகவே வந்தகுருபரா
நன்றுநற்கதி தந்தருள்செய்திட— வாவேணும்
சிந்தையில்த்தினம் போற்றுமடியவர்
பந்தபாச வினைகளகற்றிடும்
சந்தனசைல வேல்முருகா அருள்— தருவாயே
செந்தின்மாநக ரன்றுவிரைவுடன்
வந்தசேவடி போற்றிடுஞ் சோலையா
செந்தமிழ்க்கருள் செய்தசரவண— பெருமாளே.

(48) தனதன தந்தத் தனத்த தானன
தனதன தந்தத் தனத்த தானன
தனதன தந்தத் தனத்த தானன— தனதானா.

பார்புகழ் பரனு ரருள்சீலா பச்சை
மாமயிலேறிய வடிவேலா மரகத ஒளி
தோன்றிய வொய்யாரா திரு— மணிமார்பா

சீர்பெருதீனதயாகரனேசிவ
மோனமளித்தபராபரனேசூர
மாதுயர்மருவியகுருபரனே நிதம்— வருவாயே

அரவணிபுதல்வா அறுமுகனேயரி
மாதவர்சுதனூர்மருகோனேவுன
தருள் தனையேற்றிக்கவிபாட நின்— னருள்தாராய்

வரமதுதந்திடுமுயர்சீராயருள்
தரும்முருகாவுனதருள்தாராயதி
பதியெனவேநிதியுயர்நேராயுன்— னடிபேண

பரமதயாபரதந்திரனேசுர
நதிமகளெனவருமந்திரனேகதி
யருள்தருவாயுன்னடிதொழுதேன்குக— முருகேசா

சிரமதுபத்துங்கொய்தவா நின்னருள்
புரியிது அரிகரிநாரணரின்மரு
மகனெனவேவரும்மயில்வீராகிரி— தனைமேவும்

பரமனருளால்வந்தோனேவர
மருள்திருவாய்முன்சென்றேனேபதி
யருள்புரிசெந்தியில்நின்றோனேசற்— குருநாதா

பதிதனிலோங்கியதேசாதிபர்குல
அதிதமிழ்பாடுஞ்சோலைதாசனை
யதிவிரைவாகக்கண்பாராய்ததி— பெருமாளே.

(49) மங்களம்.

இராகம் - அபூருபம் - தானம் - ஆதி - தாளம் - ஆதி.

பல்லவி.

(மங்)

மங்களம் ஜெய மங்களம்

அனுபல்லவி.

ஐங்கரமூசிகர்க்கும்
ஆதிபரமேஸ்பரர்க்கும் (மங்)
செங்கைவடிவேலவர்க்கும்
தெய்வானைவள்ளியர்க்கும் (மங்)
ஸ்ரீஹரிராமருக்கும்
சீதாபிராட்டியர்க்கும் (மங்)
சத்திமனோன்மணிக்கும்
சாருங்கலைவாணிக்கும் (மங்)
எந்தன்குருவாகிய
பக்தர்சாமிநாதர்க்கும் (மங்)
பண்பாயிந்நூலியற்றும்
பாலன்சோலைசாமிக்கும் (மங்)

(50) இந்நூலின் பயன்.

ஆசிரியவிருத்தம்.

தென்பழனி மாமலை தென்பரங் குன்றமே
செந்திநக ராளவந்த
திருவடிகள் போற்றியே யருளுமிக் கீர்த்தனம்
ஜெகமதில் விளங்கவென்று
அன்பது புரிந்துமிக ஆவலுடனே யிதனை
யதிகபிர யாசையோடு
அருமறைச் சுருதிகள் சகலமுந் தெளிவாக
ஆர்ந்து ஆலோசித்துநான்
பண்புட னியற்றினேன் பலநூ லறிந்தவர்கள்
பரிவுடன் பிழையிருந்தால்
பாதுகார்த் திடவென்று ஓதியே கைதொழும்
பாலனுக் குதவிபுரிவீர்
இன்பரச கீர்த்தனம் அன்புடன் பாடுவோர்
எப்போதும் வாழ்வர் நன்றாய்